

# University of Jaffna

## Siva Yogaswami
## Memorial Lecture – 2023

Titled

**சைவப்பாரம்பரியத்தில் குருபரமூர்த்தம்**

By

**Mr.S.Vinayakamoorthy,**

Retired Instructor in English,

University of Jaffna.

*on*

**Thursday, 25th May 2023 at 3.00 p.m**

**at**

**Kailasapathy Auditorium,**

**University of Jaffna.**

# Siva Yogaswami Memorial Lecture- 2023

## சைவப்பாரம்பரியத்தில் குருபரமூர்த்தம்

By

**Mr.S.Vinayakamoorthy,**

Retired Instructor in English,

University of Jaffna.

25.05.2023



சிவயோக சுவாமி

**Siva Yogaswami**

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்துச் சித்தர் மரபின் துருவ நட்சத்திரமாகத் திகழ்பவர் சிவயோக சுவாமிகள் ஆவார். இவரது சிந்தனைகளைத் தாங்கிய ஐந்தாவது நினைவுப் பேருரைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்தில் அம்பலவாணன் செல்லாச்சி அம்மை தம்பதியர்களுக்கு 1872.05.29 ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவரே சிவயோக சுவாமிகள் ஆவார். இவர் தன்னைத்தானே உணரும் பக்குவமுடையவர். யோக நிஷ்டையில் ஆழ்ந்து தியானிப்பவர். நல்லூர் தேரடியை நிட்டை கூடும் இடமாகக் கொண்டவர். நல்லூர் செல்லப்பா சுவாமியை குருவாகக் கொண்டவர்.

யோகர் சுவாமிகளது சிந்தனைகள் "நற்சிந்தனைகள்" எனப் போற்றப்படுகின்றன. முக்காலத்தையும் உணரும் பாங்கும், ஆன்மீக ஈர்ப்பினால் இவரை நாடிவந்த சீடர்களும் பலர். அச் சீடர்களது செயற்பாடுகளும் தன்னலம் கருதாச்செயற்பாடுகளாய் அமைந்தன. அவ்வுயர்ந்த சிந்தனைக்கு "சிவதொண்டன் நிலையம்" தக்க எடுத்துக்காட்டாகும். சிவயோக சுவாமிகள் தான் பெற்ற ஞான வித்தையை நாடெங்கும் பரப்புவதற்குச் சீடர்களைப் பெற்றிருந்தார். மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், சந்த சுவாமிகள் (சோல்பொரி பிரபுவின் மகன்), சுப்ரமணிய சுவாமிகள் (ஹாவாய் ஆதீனம்), யேர்மன் சுவாமிகள்(கௌரிபாலா), பரிநரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்ரேலியா), விநாயகமூர்த்தி ஆசிரியர் என்போர் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் ஐந்தாவது நினைவுப்பேருரை சைவத்தின்காவலர் எனப் போற்றப்படும் சிறப்பிற்குரிய சைவப்பண்பாளர் திருவாளர்

ச.விநாயகமூர்த்தி அவர்களால் நிகழ்த்தப்படுகின்றமை மிகுந்த முக்கியத்துவமுடையது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தினால் "ஞானவாச்சியர்" எனும் விருதினைப் பெற்ற பெருமையுடையவர். கரவெட்டி மூத்தவிநாயகர் கோவில் அமைந்துள்ள இடத்தை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இவர் பன்னிருதிருமுறைப் படனம், திருவாசகம் முற்றோதல், கந்தபுராணப் படனம் மற்றும் ஆலய சைவப்பிரசங்கங்கள் போன்றவற்றில் மிகத் தனித்துவ மானவர். தனது வாழ்வினை அர்ப்பணித்து சைவவாழ்வு வாழ்ந்து வரும் இவர் ஆற்றொழுக்காக சபையோரைக் கவரும் வகையில் பேச்சாற்றல் மிக்க புலமையாளர். இவ்வகையில் ஈழத்தின் பேராளு மைகளுள் தவிர்க்க முடியாத ஒருவராக அடையாளப்படுத்தப்படும் அளவிற்கு இவரது தன்னலம் கருதாத பணிகள் விளங்குகின்றன.

சிவயோக சுவாமியின் மகாசமாதி தினத்தையொட்டி நிகழவிருந்த இந்நினைவுப்பேருரை இன்று நிகழவிருக்கின்றமை சுட்டிக் காட்டத் தக்கது.

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சைவப்பாரம்பரியத்தில் குருபரமூர்த்தம்

பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களே! பீடாதிபதி அவர்களே! பேராசிரியர்களே! விரிவுரையாளர்களே! பல்கலைக்கழக மாணவ மாணவிகளே! தவத்திரு சிவயோக சுவாமிகளின் அன்பிற்கும் ஆசீர்வாதத்திற்கும் உரித்தாகும் பேறுபெற்ற அன்பர்களாயும் அவர்கள் வழிவந்தவர்களாக விளங்குபவர்களாகவும் சுவாமிகளின் நினைவைப் போற்றுபவர்களாகவும் உள்ள சமயச் சான்றோர்களே! உங்கள் எல்லோருக்கும் எனது அன்பும், பணிவும் கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பெருமதிப்பிற்குரிய இப்பல்கலைக்கழகத்தில் இந்துக்கற்கைகள் பீடம் என்ற உயரிய பீடம் அமைந்திருப்பதோடு அதில் சைவ சித்தாந்தத்திற்கென ஒரு தனித்துறையும் அமைந்திருப்பதை எண்ணி இந்நாட்டில் வாழ்கின்ற, ஏன், உலகெங்கிலும் வாழ்கின்ற சைவப் பெருமக்கள் எல்லோரும் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்பதை இவ்விடத்தில் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன். இந்நாட்டில் உள்ள இந்துக்களில் மிகப்பெரும்பான்மையோர் சைவத்தையே பின்பற்று கின்றனர். இதைத் தமிழ்நாட்டவர்களாகிய சமயச் சான்றோர்களே குறிப்பிட்டுள்ளார்கள். இந்நிலையில் சென்ற நூற்றாண்டில் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் இந்நாடு முழுவதிலும் வேறுநாடுகளிலும் கூட-ஆயிரக்கணக்கானவர்களை இன, மத பேதங்கள் கடந்து, தம்முடைய கருணையினால் கவர்ந்து முதலில் அவர்களிடம் பொருந்தியிருந்த குற்றங்களைக் களைந்து, மனமாசு நீக்கிப் பின்னர் தெய்வ நெறிக்குச் செலுத்தும் வகையில் ஆட்கொண்டருளி மெய்ஞ்ஞானச் செல்வராக வாழ்ந்து இறையடி அடைந்த சிவயோகசுவாமிகளின் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சாதாரணமாக இலக்கியப் படைப்புகளை ஆராய்ந்து அளவீடு செய் வதைப் போன்று அருளாளர்களது வாக்குகளையோ வாழ்க்கையையோ

அளவிடவும் முடியாது, அணுகவும் இயலாது, ஆராய்ந்து அளவீடு செய்பவருடைய பக்குவம், அறிவு என்பவற்றுக்கேற்பவே அளவீடும் இருக்கும். அதாவது அளவையைப் பொறுத்தே அளவும் வரும். ஆயினும் போற்றுதலுக்கும் வாழ்த்துவதற்கும் தனித்தகுதி வேண்டியதில்லை.

*"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்*
*தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாம் தொழவேண்டி" (8:5:16)*

என்ற மாணிக்கவாசகசுவாமிகள் திருவாக்கிற்கமைய ஒரு வரையறை செய்ய வேண்டிய இன்றியமையாமை இருக்கிறது. சுவாமிகளோ வரையறைகளுக்கு அப்பாற்பட்டவராயிருந்தவர். ஆனாலும் **"அவருக்குச் சமய தத்துவச் சின்னம் ஏதும் சூட்டுவதாயின் அவரை ஒரு வைதிக சைவர்"** எனவும் **"சுத்தாத்துவித சைவசித்தாந்தி"** எனவும் அழைத்தற்குரிய தெளிவான அடையாளங்கள் அவரிடம் தெரிந்தன.

என அவரோடு நீண்டகாலம் உடனுறைந்து அணுக்கத் தொண்டராம் பேறுபெற்றவரும், சுவாமிகள் திருவடிக்கலப்புற்ற பின்னரும் சிவத்தொண்டன் நிலையத்தைச் செங்கலடியிலும், யாழ்ப்பாணத்திலும் சுவாமிகள் திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் செயற்படுத்தியவரும் ஆகிய செல்லத்துரை சுவாமிகள் (அவர் தம்மை சுவாமி என்று குறிப்பிடுவதில்லை) குறிப்பிடுகிறார். மேலும் சுவாமிகள் திருமுறைகளிலும் கந்தபுராணம் போன்ற புராணங்களிலும் சைவம் சார்ந்த அருளாளர் வாக்குகளிலும் பெருவிருப்பமும் ஆட்சியும் உடையவராகத் திகழ்ந்தவர் என்பதை அவருடைய அன்பர்கள் பலரும் குறிப்பிடுவர்.

எனவே சைவப்பாரம்பரியத்தில் குருபரமூர்த்தத்தின் முக்கியத்தையும் குரு சீட பாரம்பரிய முறையில் மெய்ப்பொருளை அறிந்து அதனை அடையும் மார்க்கத்தினையும், அவ்வாறு அநுபூதியில் உணர்ந்த மெய்ஞ் ஞானிகள் தாம் பெற்ற இன்பம் நாமும் பெற வேண்டுமென்ற பெருங் கருணையினால் அவற்றைத் தமது வாக்கினாலும் வாழ்க்கையினாலும் வெளிப்படுத்துகின்ற தன்மையையும் அப்பாரம்பரிய முறையிலே

சிவயோகசுவாமிகளும் அவரது குருமூர்த்தமான செல்லப்பதேசிகரும் வாழ்ந்து வழிகாட்டிய தன்மையினையும் சிந்திப்பது மிகப் பொருத்த மானதாக இருக்கும். அவ்வகையில் **"சைவபாரம்பரியத்தில் குருபரமூர்த்தம்"** என்ற தலைப்பில் இவ்வுரையை நிகழ்த்த எண்ணுகின்றேன்.

**"சைவம் சிவத்துடன் சம்பந்தமானது"** என்பது திருமூலர் திருவாக்கு. எனவே சைவர்கள் ஆகிய நாம் எல்லோரும் சிவசம்பந்திகள். சைவம் பிரமாணங் களாகக் கொள்ளும் திருநூல்கள் வடமொழியில் வேதசிவாகமங்களும் தமிழில் பன்னிருதிருமுறைகளும் அவற்றுக்கு மாறுபடாதெழுந்த அருளாளர் திருவாக்குகளும் ஆகும். அவ்வகையில் தோத்திர, சரித்திர வகையாக எழுந்த வாக்குகளின் பிழிவாக, சாரமாக எழுத்தவையே மெய்கண்ட சாத்திரங்கள், அவை இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் முறையிலே எழுந்தவை. அவை விதிகளையும் சொல்லும், இன்றியமையாத இடங்களிலே விலக்குகளையும் சொல்லும், உதாரணமாக:-

*"மோக மழித்திடின் யாம் முத்தி கொடுப்பதென*
*ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்*
*தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை*
*ஏதாகச் சொல் வேன் யான்."*

திருக்களிற்றுப்படியார், 72

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது வாழ்க்கையோடியைந்த முக்கிய நிகழ்வை, சிவபிரான் செய்தருளிய திருவருட் செயலோடு இணைந்த திருவிளையாடலைக் குறிக்கும் முகமாக எழுந்த திருவாக்கு அது.

## திருமந்திரத்தில் குருமூர்த்தம்

திருமந்திரம் தந்த திருமூலர் மூத்தசித்தர். பிற்காலத்தில் எழுந்த சாத்திர தத்துவத் திருநூல்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள கருத்துகளின் கருவூலம் திருமந்திரம். பிறவி வேரறுக்கும் பெரும் பொருளைப் பணிந்து தொண்டாற்றி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவனருளாலே அவன் தாள் வணங்கும் பெருநிலையில் நின்று பத்திமையால் பணிந்து பன்னாட் பாமாலை சூட்டிய மற்றைய திருமுறைச் செல்வர்களைப் போல் அவரும் அந்நிலையிலும் நின்றவரே. அதனாலேயே திருமந்திரம் பன்னிரு திருமுறைகள் தொகுப்பில் பத்தாந்திருமுறையாகும் உயரிய இடத்தைப் பெற்றுள்ளது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆக, திருமந்திரம் தோத்திரத்துக்குத் தோத்திரமாகவும் சாத்திரத்துக்குச் சாத்திரமாகவும் அமைந்துள்ளது. அது எவ்வாறு தோத்திரமாகக் கருதப்படலாம் என்பதற்கு சில உதாரணங்களையாவது குறிப்பிடுதல் இவ்விடத்தில் அவசியம் எனக் கருதுகின்றேன்.

*"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்*
*என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்*
*என் பொன் மணியை இறைவனை யீசனைத்*
*தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே."*

திருமந்திரம் -2980

என்று இறைவனாகிய கனியையே தின்பாராம், கடிப்பாராம், திருத்து வாராம். கனிவடிவத்தையே மாற்றுவாராம். நமச்சிவாயப் பழத்தைத் தின்று சுவை பார்த்து அது தித்தித்த தன்மையை

*"ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்*
*ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது*
*நன்றுகண் டீர் நல் நமச்சிவா யப்பழந்*
*தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே."* (2962)

திருமந்திரத்துக்கேயுரிய தனிச்சிறப்பு அதன்கண் விளங்கும் சைவ தத்துவங்களுக்கு மூலமாகவும், இலக்கணமாகவும், மேல்வரிச் சட்டமாகவும் விளங்கும் திருவாக்குகளே பதி, பசு, பாசம் எனத் தமிழில் சாத்திர வடிவில் எழுந்த முதற் பிரயோகமே திருமந்திரத் திருவாக்கு.

*"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்*
*பதியினைப் போற்பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதியணு கிற்பசு பாச நில்லாவே."* (115)

இங்கே முப்பொருளிலக்கணத்தை, அதன் செறிவை, நான்கு வரிகளிலே நாம் காண்கின்றோம். குறிப்பாக ஈற்றடியிலே **"பதி எதிரிற் பசு பாசம் நில்லாவே"** என வரும் குறிப்பு பதியாகிய இறைவன் - குருவடிவாக அமையும் போது ஆன்மாவின் பாசம் நில்லாது நீங்கும் என்பதையே காட்டும், குரு என்ற சொல் **"அஞ்ஞான இருளைப் போக்குபவர்"** என்பதாகும். பக்குவான்மாக்களுக்காக இறைவன் தானே குருவடிவம் தாங்கி வந்து ஞானோபதேசம் செய்து மோட்சத்தைத் தந்தருளுவன்,

*"குருவே சிவமெனக் கூறினன் நந்தி"* (10:01:09)
*"நந்தியருளாலே மூலனை நாடிப் பின்"* (10:01:29)

என்பவை திருமந்திரத் திருவாக்குகள். குருவினது முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவதற்காக,

*"சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே*
*சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா*
*சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்*
*ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"* (117)

எனத் திருமூலர் கூறுவார்.

சூரிய காந்தக்கல் எவ்வாறு சூரியனது ஒளியைத் தான் பெற்றுப் பின்னர் சூழ்ந்திருக்கும் பஞ்சைச் சுடுகின்றதோ அதே போன்று ஞானாசிரியன் தானடைந்த இறைவனின் கருணையினால் வினையைத் தகித்து அருள்

புரிவன் என்பது பொருள், ஆன்மசாதகன் எத்தகைய குருவை அடைய வேண்டும் என்பதையும் திருமந்திரம் சுட்டிக் காட்டும், அதை உடன்பாட்டு முறையினாலும் எதிர்மறை வகையாலும் தெளிவுபடுத்தும். மெய்ப் பொருளைத் திருவருளால் அநுபூதியில் உணர்ந்து வழிகாட்டும் பக்குவம் பெறாதவர்கள் எவ்வாறு ஞானாசிரியர்களாக விளங்க முடியும் ? அறியாமை - அஞ்ஞானம் ஆகியவற்றை நீக்கும் அதி உன்னத நிலை இல்லாதவர்கள் அவற்றை நீக்க வேண்டும் என்று தம்மை அடைபவர் களது அஞ்ஞானத்தை எவ்வாறு நீக்க முடியும்? இதையே திருமூலர்,

*"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்*
*குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்*
*குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்*
*குருடுங் குருடுங் குழிவிழு மாறே."* (1680)

என்று தமக்கேயுரிய முறையில் அருளி, எள்ளி நகையாடுகிறார். இது எதிர் மறை முறை. எத்தகைய குருவினை அடைய வேண்டும்? அதனால் என்ன பயன்? என்பதையும் குறிப்பிட்டு உடன்பாட்டு முறையிலும் வழிகாட்டுவார்.

*"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக*
*உள்ள பொரு ளுடல் ஆவி யுடன்ஈக*
*எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று*
*தெள்ளி யறியச் சிவபதந் தானே."* (1693)

என்று சற்குருவையே இறைவனாகக் கண்டு உடல் பொருள் ஆவி ஆகிய எல்லாவற்றையும் அவரிடமே சமர்ப்பித்து பரிபூரண சமர்ப்பணம் செய்து உடலாலும் உணர்வாலும் நீங்காது நின்று ஒருமுகப்பட்ட சிந்தனையோடு அவர் உபதேசத்தைத் தெளிவாக அறிய. அநுபூதியிலே உணரச் சிவகதி சித்திக்கும் என்பார், "சத்தும், அசத்தும், சதசத்தும் காட்டலார் சிவகுருவே சிவம் என்றும் குறிப்பிடுவார். ஏலவே குறிப்பிட்ட **"பதி பசு பாசம்"** என ஆரம்பிக்கும் திருப்பாட்டுடன்

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே." (2355)

"பொட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனைப்
பொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப் பின்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே."

"என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறித்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னையிட் டென்னை உசாவுகின்றானே?" (2366)

எனவரும் நான்கு திருமந்திரப் பாக்களும், மெய்கண்ட சாத்திரங்களின் நாயகமாகக் கருதப்படும் சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களின் பொருளையே மும்மூன்றாக முறையே சொல்லுகின்றன என்பது பிரமாணத் திருநூல்களை முறைப்படி கற்றுணர்ந்த சைவச் சான்றோர்களது மேலான கருத்தாகும். ஆன்ம சாதகன் தன்னைத் உணர்ந்து, சற்குருவை திருவருளால் தரிசித்து, மேலே சுட்டிய வண்ணம் ஞானம் கைவந்த நிலையில் **"இத்தனை காலமாக மலமாயையிலே கிடந்து ழுன்ற தன்னைச் சற்குருநாதன் ஆட்கொண்டு மலமாசறுத்த அனுபவத்தைச் சொல்கிற முறையை"** இத்திருமந்திரப் பாடல்களிலே காணலாம். **"இறைவன் தன்னையே எனக்குத் தந்தருளினான். என்னை ஏன்றுகொண்டான். பண்டமாற்று வாய்க்கப் பெற்றது"** என மகிழ்கின்றார் திருமூலர். **"இவ்வாறு பெறக்கூடிய பேரானந்தப் பெரும் பேற்றை இத்தனை காலமும் இழந்திருந்தேனே"** எனக் கழிவிரக்கப்படுகிறார்.

"சக்கரவர்த்தி தவராசயோகியெனும்
மிக்க திருமூலனருள் மேவுநாள் எந்நாளோ"

எந்நாட்கண்ணி:அடியார் வணக்கம்:07

எனத் தாயுமானராலே **"குருமரபிற்"** போற்றப்படும் திருமூலர் போன்ற மகான்கள் திருவருளிலே திளைத்து, அவர்களுடைய மொழியிலே சொன்னால் **"இராப்பகலற்ற நிலையில் இருப்பவர்கள்"**. ஆயினும் தெய்வத்திருவருள் அவர்களது மூலமாக நம்மேலும் வந்து சேர்வதுண்டு. திருமூலநாயனாரும் உலகுயிர்கள் உய்ய வேண்டுமென்ற கருணையினால் நயமாகவும், நேரடியாகவும் குறிப்பாகவும் உபதேசிப்பர். பொதுவாகவே சித்தர்கள் **"வார்த்தை நாகரிகம்"** பார்ப்பதில்லை.

*"முகத்துக் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்*
*அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"* (2904)

என்பார் திருமூலர், ஆம் ! **"அருட்கண் ணிலாதார்க்கு அரும் பொருள் தோன்றா"** என்று குருமுகமாகத் தாம் பெற்றவையெல்லாவற்றையும் அவர் வெளிப்படுத்தியவையே திருமந்திரத் திருவாக்குகள். சைவம் காட்டும் பிரதான அம்சங்கள் எல்லாவற்றையுமே திருமந்திரத்தில் காணலாம். பஞ்சாட்சர வகை, ஆலய அமைப்பு, சரியையாதி நாற்பாதங்கள், சாலோக சாமீப சாரூப சாயுச்சிய முத்திவகைகள், அணைந்தோர் தன்மை முதலிய வெல்லாம் திருமந்திரத்தில் தரப்பட்டுள்ளன. சாதாரண உலகியலில் வாழ்வோருக்கும் இயலக்கூடிய, - விளங்கக் கூடிய, - வகையில் உரைக்கப்பட்ட தர்மங்களும் திருமந்திரத்தில் உள்ளன.

*"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை*
*யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை*
*யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே." (252)*

*"அப்பனை நந்தியை ஆரா அமுதினை*
*ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை*
*எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்*
*அப்பரி சீசன் அருள்பெற லாமே" (36)*

இவ்வாறு மூத்தசித்தரான திருமூலர் சைவம் சார்ந்த உயர்தத்துவங்களை, பொதுவாக சித்தர்களுக்கேயுரிய சங்கேத மொழிநடையிலும், (பரிபாசையில்) சில இடங்களில் சாமானியர்களும் விளங்கிப் பின்பற்றக் கூடிய வாழ்க்கை முறைகளை எளிமையான மொழியிலும் குறிப்பிடுவர். குருநாதனைத் தாம் கண்டு நமக்குக் காட்டியவர் அவர்.

## திருவாசகத்தில் சிவகுரு தரிசனம்

நமது சமயத்தில் இறைவன் குருவடிவம் தாங்கி எழுந்தருளி பக்குவான் மாக்களை ஆண்டு முத்தியின்பத்தைப் பிரசாதித்தருளுவன் என்ற கருத்தினை ஆழமாக நம்புவதற்கு திருவாசகமே மிக முக்கிய ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. சைவம் சுட்டும் குருமூர்த்தத்துக்கும் குருவருள் பெறும் ஆன்மசாதகனின் அதிஉன்னத பக்குவத்துக்கும் குரு உபதேசத்திற்கும், கருணைக்கும் அதைப் பெறுவதற்குப் பேறுபெற்ற புண்ணியாத்மா கொள்ளும் அன்பின் பெருக்கிற்கும் உயரிலக்கியமாக திருவாசகத்தையே சைவச் சான்றோர்கள் கொள்வர். உதாரணமாக உயரிலக்கியமாகக் கொள்ளப்படுகின்ற திருவாசகத்தையும் பிற் காலத்தில் இலக்கணமாகக் கொள்ளப்படுகின்ற சாந்திரங்கள், புராணங்கள் போன்றவற்றின் பகுதியையும் சேர்த்து சிந்திப்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

நமது தமிழ்மொழியின் சிறப்பிற்கு அறனிடத்துள்ள பக்தி இலக்கியத்தின் செழுமையே முதல் வைத்தெண்ணப்படுகின்றது. சின்னாட் பல்பிணிச் சிறுதொழில் மனிதரைப் பாடாது இறைவனையும் அவன் கருணையையும் நினைத்து பல்வேறு நிலைகளிலே நின்று பாடிப்பரவும் அருளாளர்களது வாக்குகள் கொண்ட அவ்விலக்கியப் பெரும்பரப்பில் திருவாசகத்துக் கெனத் தனிஉயர் இடம் உண்டு. **"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்"** என்பது பலரும் அறிந்த பழமொழி. குரு பாரம்பரியத்தை விளக்குவதற்கு எழுந்த சாத்திர நூல்கள் மணிவாசகரது திருவாகத்தையே பெரிதும் ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையே என்று எண்ணக்கூடிய வகையில் அமைந்துள்ளன. எனவே திருவாசகம் சுட்டும்

குருமூர்த்தத்தைக் கொண்டு சாத்திரத் திருநூல்களும், திருவாதவூரடிகள் புராணம் போன்றவையும் விளங்குகின்றன என்பதைச் சற்றுச் சிந்தித்தல் பொருத்தமானதாக இருக்கும்.

மணிவாசகர் தம்மை இறைவனே குருவடிவம் தாங்கி எழுந்தருளிவந்து ஆட்கொண்டருளினான் எனப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

*"நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"*
*(சிவபுராணம்)*

*"கருணையின் பெருமை கண்டேன் காண்க*
*புவனியிற் சேவடி தீண்டினன் காண்க*
*சிவனென யானுந் தேறினன் காண்க*
*அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க."*
*(திரு அண்டப்பகுதி)*

*"அருபரத் தொருவன் அவனியில் வந்து*
*குருபர னாகி யருளிய பெருமையை"*
*(போற்றித் திருவகவல்)*

*"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்டும்*
*தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை*
*உருக்கும் பணிகொள்ளும்" (திருத்தெள்ளேணம்)*

*"செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய*
*பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போத்தருளி*
*எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு"*
*(திருவம்மானை)*

போன்ற பல திருவாசக அடிகள் இதற்கு அகச்சான்றுகளாய் விளங்குகின்றன.

சிவமே பக்குவான்மாவை ஆட்கொள்ளக் குருமூர்த்தமாய் எழுந்தருளும் என்பதை சிவஞான போதம் எட்டாம் சூத்திரம் **"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்டு அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே"** (சிவஞானபோதம்: சூத்திரம்:08) எனக் குறிப்பிடும்.

ஆன்மா இதுவரை செய்து வந்த சரியை, கிரியை, யோகங்களாகிய தவப்பயனால் அதற்கு இதுவரை உள்நின்று உணர்த்திய முதல்வனே இப்போது குருவடிவமாயும் எழுந்தருளி வந்து அவனைப் பார்த்து **"நீ ஐம்புலன்களாகிய வேடருள் அகப்பட்டு வளர்ந்து உன்னுடைய பெருந்தன்மையை அறியாது மயங்கித் துன்புற்றாய். உன் தன்மை இன்னது"** என்று உணர்த்த ஆன்மா உணர்ந்து ஐம்புல வேடரை விட்டு நீங்கி இறைவனோடு அந்நியம் ஆகாத தன்மையின் நிலைபெற்று அவனுடைய திருவடிகளை அடையும்! என்பது சூத்திரத்தினது விளக்கம். இதனையே சிவஞான சித்தியார் "அரசிளங்குமரன் பிள்ளைமைக் குணந்தால் வேடுவருடன் கூடித் தன்னையும் அவருள் ஒருவனாய் நினைத்து வாழ்ந்தானாக. தந்தையாகிய அரசன் அவனைக் கண்டு நீ வேடனல்லன் நீ எனது மகன் எனத் தெரிவித்துப் பெருமை பொருந்தக் தானாக்கிப் பேணுதல் போல" என உவமையை விரித்து விளக்கி அந்த ஆன்மா செய்த தவப்பயனாய இறைவனே குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து, உபதேசித்து, மல வலியைக் கெடுத்து, தன்வண்ணமாக்கி மலர் போலும் தனது திருவடியில் பேரானந்தம் பேராநிலையில் வைத்தருள்வன் என விளக்கும்.

*"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி*
*வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்*
*பின்னவனும் என்மகன்நீ யென்றவரிற் பிரித்துப்*
*பெருமையொடும் தானாக்கிப் பேணுமாபோல்*
*துன்னியஐம் புலவேடர் சுழலிற்பட்டு,*
*துணைவனையு மறியாது துயருறுந்தொல் உயிரை*

*மன்னுமருட் குருவாகி வந்தவரில் நீக்கி,*

*மலமகற்றிற் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்”*

சிவஞான சித்தியார்:சூத்திரம்:08

திருவருட்பயனோ சிவகுருவாக சிவபெருமானே வந்து பக்குவான் மாவினது மலங்களை நீக்கி ஆட்கொள்ளுவன் என்று கூறும். அருளுரு நிலையைச் சொல்ல வருகிற அந்த அதிகாரம் முழுவதும் மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத்தையே ஒட்டியே அமைந்திருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையில் ஆக்கப்பட்டிருக்கின்றது, என்று அறிந்தவர் கூறுவர். மிருகம் ஒன்றைப் பிடிப்பதற்கு அதன் இனத்தைச் சார்ந்ததும் பயிற்றப்பட்டதுமான ஒரு மிருகத்தையே (பார்வை மிருகம்) பயன்படுத்தும் வழக்கத்தை உதாரணமாக திருவருட்பயன் கூறும். அதேபோன்று மனிதனாக இருப்பவனாகிய ஆன்மாவை ஆட்கொள்ள மனிதவடிவம் கொண்டு குருவாக இறைவன் வருவன். இதை மானுடச்சட்டை சாத்தி இறைவன் குருமூர்த்தமாக எழுந்தருளல் என்பர்.

*“பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்*

*போர்வையெனக் காணார் புவி”* திருவருட்பயன்:65

சொரூபநிலையில் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத இறைவன் அவையுடையவன் போல வருதலின் உரு, உடை, போன்ற போர்வை ஆகும். பார்வை மிருகம் போல அருட்குரவனும் ஆன்மாவை வசப்படுத்துவன்.

இவ்வதிகாரத்தின் முதற் குறளிலே பந்தகாலத்திலும் ஆன்மாவிடத்தில் விட்டுப் பிரியாமல் தண்ணளி புரிந்திருந்த தயாபரன் இப்போது சுட்டிக் காணக்கூடிய வடிவமாக மானுடச்சட்டை சாத்தி வருவன் என்பதை திருவருட்பயன் குறிப்பிடும். பாம்பு தீண்டியவனுக்கு கீரி வந்து பொருந்தி னாலும் விடம் நீங்காது கீரியின் மந்திர பாவனை வல்லவன் விடம் நீக்குவான். அதுபோலச் சிவோகம் பாவனை தலைப்பட்ட ஞானகுரவனே மலம் நீக்குவான்.

*"விட நகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்*

*கடனில் இருள்போவது இவன்கண்"*      திருவருட்பயன்:87

என்பது திருவருட்பயன்.

ஞானகுரவானது தரிசனம் கிடைக்கப் பெற்ற பக்குவான்மாவுக்கு அத் தரிசன விசேடத்தினால் ஏற்படும் மெய்ப்பாடுகள் ஆதிய விளைவு களையும் திருவாசகத்தினூடும் திருவாதவூர் அடிகள் புராணத்தாலும் அறிந்து கொள்ள முடியும். மேலும் சட்சு தீட்சை, திருவடிதீட்சை, சாத்திர தீட்சை, பரிசதீட்சை ஆகிய எல்லாவற்றையும் ஞானகுருபரன் மணிவாச கருக்குச் செய்தருளியமையும் திருவாசகத்திலே ஆங்காங்கே அகச் சான்றுகளாகவும் திருவாதவூரடிகள் புராணத்தில் விரிவாகவும் பரக்கக் காணலாம். மணிவாசகர் தம்மை இறைவனே குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து ஆட்கொண்ட தன்மையினையும் தமக்கு அக்குருபரன் செய்தருளிய தீட்சைகளையும் தமது வினைகளை அழித்தமையையும் தம்பொருட்டுச் செய்தருளிய திருவிளையாடல்களையும் திருவாசகத்தில் பல இடங்களில் உருகி உருகித் தெரிவிக்கிறார்.

இறைவனே குரு வடிவமாக (மானுடச் சட்டை தாங்கி) தம்முன் எழுந்தருளியமை.

*"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை*

*உரு நாமறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்"*

- திருத்தெள்ளேணம்

*"ஆவா அரிஅயன் இந்திரன் வானோர்கரிய சிவன்*

*வாவா என்றென்னையும் பூதலத்தே வலிந்தாண்டு கொண்டான்"*

- திருத்தெள்ளேணம்

*"அருமந்த தேவர் அயன் திருமாற் கரிய சிவம்*

*உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளி"*

- திருத்தெள்ளேணம்

வினை நீக்கியமை, பாச மறுத்தமை

"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்" - திருச்சதகம்

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை"
-திருஅம்மானை

"கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து
வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன்றன்
பசுபாசம் அறுத்தானை" -கண்டபத்து

தீட்சை

"இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்."
-திருப்பூவல்லி

"புற்றுமாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்"
-செத்திலாப் பத்து

பஞ்சாட்சரம்

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" (சிவபுராணம்)

"நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்".

-திருவேசறவு

"போற்றியோ நமச்சிவாய
புயங்கனே மயங்குகின்றேன்". -திருச்சதகம்

சிவமாந் தன்மை எய்தப் பெற்றமை

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்"

-அச்சோப்பதிகம்

"நாம் ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளணம் கொட்டாமோ"

-திருதெள்ளேணம்

இருவினையொப்பு மலபரிபாகம்

"உணக்கிலாததோர் வித்து மேல் விளையாமல்
என் வினையொத்த பின்" -திருக்கழுக்குன்றப்பதிகம்

அணைந்தோர் தன்மை

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துத்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
யாயென்னைக் கண்டுகொள்ளே" -திருச்சதகம்

*"பாட வேண்டும் நான் போற்றி நின்னையே*
*பாடி நைந்து நைந் துருகி நெக்கு நெக்கு*
*ஆட வேண்டும் நான் போற்றி"* -திருச்சதகம்

*"பாடிற்றி லேன்பணி யேன்மணி*
*நீயொளித் தாய்க்குப்பச்சூன்*
*வீடிற்றி லேனை விடுதிகண்*
*டாய்வியந் தாங்கலறித்*
*தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்*
*தான்எவர் கண்டனரென்று*
*ஓடிற்றி லேன்கிடந் துள்ளுரு*
*கேன்நின் றுழைத்தனனே."* -நீத்தல் விண்ணப்பம்

இந்த நாட்டிலே புராண படனமாக ஆண்டு தோறும் படனம் செய்யப்படும் புராணங்களுள் அதிக ஆலயங்களிலும் இடங்களிலும் பயன்படுத்தப் படுவது திருவாதவூரடிகள் புராணமே. திருவெம்பாவைக் காலங்களில் திருவெம்பாவைப் பூசை முடிந்த பின்னர் பல ஆலயங்களில் அப்புராண படனம் இடம்பெறும். அளவிலே சிறியதாகவும் பக்திச்சுவை மிகுந்ததாகவும் அமைந்துள்ள அதில் மாணிக்கவாசகசுவாமிகளது சரிதம் பல சுவைகளும் நிரம்ப அமைந்திருப்பினும் அவை எல்லாவற்றையும் விழுங்கிப் (பெரியபுராணம் போல்) பக்தி சுவையே மேலிடுவதைப் படிப்பவர்கள் உணர்வார்கள். மேலும் பல இடங்களில் குறிப்பாக மணிவாசகர் பாடி அருளிய திருவாசகங்கள் அவ்வத்தலங்களுக்குரிய னவாக அமையும் போது சொல்லும் வகையில் அவ்வத் திருவாசகங் களுக்குரிய சொற்பிரயோகங்கள் பொருட்சுருக்கங்கள் ஆகியவை தரப்பட்டுக் குறிப்பிட்ட திருவாசங்களை ஓதும் போது ஏற்படும் மெய்ப் பாடுகள் வரக்கூடிய வகையில் கவிகள் அமைந்திருக்கும். குறிப்பாக, திருப்பெருந்துறைச் சருக்கம், திருவம்பலச்சருக்கம் ஆகிய இரண்டிலும் வேறிடங்களிலும் சைவசித்தாந்தத் தத்துவங்கள், சிவபிரானாகிய குருமூர்த்தியின் திருவாக்காக அமையப் பெற்றிருக்கின்றன.

இறைவனது பரமாசாரியத் திருக்கோலத்தைத் திருவாதவூரர் தரிசித்து மகிழ்ச்சி கொண்டு தமது வழக்கத்தின்படி - ஞானகுருபரனை அறியும் முயற்சியாக - குருபரமூர்த்தி திருக்கையில் பொருந்திய திருநூலின் பெயரையும் அதன் பொருளையும் பற்றி வினாவி, குருமூர்த்தி உரைத்தருளிய பதிலால் உள்ளம் உருங்கினார் என்று சொல்ல வருகின்ற போது கடவுண்மாமுனிவர்,

*"உத்தமரின்னவாறிங் குரைத்தலுமுவந்து நாலாஞ்*
*சத்திநி பாதமெய்துந் தன்மைய ராதலாலே*
*யத்திரு மன்றுளாடு மையரிங் கென்னையாள*
*வித்திரு மேனிகொண்டா ரென்பது மனத்தி லெண்ணி."*

திருவாதவூரடிகள் புராணம், 85

என சத்திநிபாத நிலையை விளக்கி அதன் காரணமாக திருவாதவூரர்,

*"மின்னினு நிலைமை யில்லா*
*விழுப் பொருள் யாவும் வேண்டே*
*னுன்னடி யடைந்து நாயே*
*னுறுபவ மொழித்தல் வேண்டு*
*மென்னையின் றடிமைக் கொள்வா*
*மெய்முயிர்க் கிறைவா வென்று*
*முன்னுற வணங்கி நின்றார்*
*முகமெங் கண்ணீர் வார".*

திருவாதவூரடிகள் புராணம், 86

நிற்ப அவர் பக்குவ நிலையைக் கண்டு அவ்வடியர்களுள் தலைவர் இவ்வடியவனை வெவ்வினையகற்றி ஆண்டருள வேண்டும் எனப் பிராத்திக்க, அவ்வாறே குருமூர்த்திகள் இசைந்தருளிய வாதவூரர் மேல், நயன தீட்சையைச் செய்தருளி திருவடித் தீட்சை செய்தருளவும் திருவுள்ளங் கொண்டார். அத்துவசுத்தி செய்தல், நயன தீட்சை, வாசிக தீட்சை செய்தருளி 'பஞ்சாக்கர உபதேசம் செய்யும் போது தூலம்,

சூக்குமம், காரணம், மகாகாரணம், மனு ஆகிய எல்லா முறைகளையும் உபதேசம் செய்தருளினர் என்றும் தழுவிப் பொருள் கொள்ளும் வகையில் செய்யுள் உரை (ம.க.வேற்பிள்ளை உரை) அமைந்திருக்கிறது.

திருவடி தீட்சையையும் பரமாசாரியர் செய்தருளிய பின்னர் விசேடமான சைவாகமங்களை உபதேசித்தல் ஆகிய சாத்திர தீட்சைச் செய்யும் வகையில் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், அருவம், உருவம், அருவுருவம் ஆகிய தமது மூவகைத் திருமேனிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் சாலோக, சாமீப சாரூப, சாயுச்சிய முத்திகள் மும்மலங்கள் ஆகியவற்றையெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் அமையும் வண்ணம் புராணம் அமைந்துள்ளது. மேலும் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூவினைகளும் குருபரனாகிய சிவத்தினால் நீக்கப்படும் என்பதை திருவாதவூரர்க்கு அவ்வாறு நீக்கப் பட்டதை அக்குருபரமூர்த்தியின் திருவாக்கால் புராணம் குறிக்கிறது.

*"விரிந்த சஞ்சித வினைகளன் புடனாம்*
*விழிக்க வெந்தன விரவுமிப் பிறப்பிற்*
*பொருந்தும் வல்வினை யுடலுட னகலும்*
*புந்திசேரருள் வருவினை போக்கு*
*மருந்து யர்ப்பொரு ளுயிருடம் புனவே*
*யல்ல நம்மன வாகுமிங் குனைப்போ*
*லிருந்த கங்குரு வடிவைநின் கருத்தி*
*லிருத்து வாய்பொரு ளீதுவென மொழிந்தார்"*

திருவாதவூரடிகள் புராணம்,112

வாதவூரரது சஞ்சித வினைகள் குருமூர்த்தியின் நயன தீட்சையால் அழிந்தன. பிரார்த்த வினை உடலுடன் அழிந்து போகும் பிறவியில் மேலும் ஈட்டுகிற ஆகாமியம் உள்ளத்தில் பதிந்த குருவருளால் இல்லா தொழியும் எனப் புராணம் விளக்குகிறது. மேலும் கொடிய துன்பத்தைத் தருகிற பொருள் உயிர், உடம்பு ஆகியவை உன்னுடையவல்ல் அவை

நம்முடையவை. ஈண்டு உன்னைப் போல் மனிதன் வடிவில் வந்திருக்கும் நமது இக்குருவடிவத்தையே உனது உள்ளத்தில் எப்போதும் இருத்திக் கொள்வாய் என குருநாதர் உபதேசித்ததாக வரும் இப்புராணத்தின் ஈற்றில் வரும் அடிகள் திருவாசகத்தில்.

*"அன்றே என்றன் ஆவியும்*
*உடலும் உடைமை எல்லாமுங் குன்றே அனையாய் என்னை ஆட்*
*கொண்ட போதே கொண்டிலையோ"* -குழைத்த பத்து

எனவரும் அடிகளின் பொருளை அப்படியே தருவதை நாம் அவதானிக்கலாம். குருமூர்த்தியினது தரிசனம், தீட்சை வகைகள், உபதேசம் முதலியவை பெற்ற பின் திருவாதவூரரது நிலைமையை விளக்கும் பாடல் சீவன்முத்தர்களுடைய நிலையைச் சாத்திர நூல்கள் விளக்கும் முறையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம்.

*"அன்புடன் னோக்கு நிற்ப*
*ஏழுவர்கை தொழுவர் வீழ்வ*
*ரின்புற வெழுவர் பின்பா*
*லேகுவ ரிரங்கி மீள்வர்*
*நன்பகல் கங்குல் காணார்*
*ஞானநல் லறிவே கண்டு*
*கொன்புனை பித்தர் பாலர்*
*பிசாசர்தங் கொள்கை யானார்".*

திருவாதவூரடிகள் புராணம்:128

ஈற்றில் திருவாதவூரர் தில்லை நடராசரரோடு இரண்டறக் கலத்தல் ஆகிய சாயுச்சிய முக்தியை அடைந்த முறையைச் சொல்லும்போது

*"பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு*
*மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராக்கினார்"*

திருவாதவூரடிகள் புராணம் திருவடிபெற்ற சருக்கம்:29

என்றும் புராணம் குறிப்பிடும். உலகில் வாழும் போதே சீவன்முத்தராக இருந்து சிவமாந் தன்மை பெற்ற அவர் சுதேக முக்தி எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் முக்தியை அடைந்த போது தில்லைப் பெருமான் அவரைப் பாலுடன் கலந்த நீராக்கினார் என்பதன் மூலம் முத்தி இன்பத்தில் திளைக்கும் ஆன்மா சிவத்துடன் கலப்பு வகையால் ஒன்றாகச் சேர்ந்து ஒன்றாகத் தெரியினும் உண்மையில் அவை இரண்டானவையே. பாலும் நீரும் கலத்தல் கலப்பு நிலைமையில் மாத்திரம் ஒரு புடை ஒப்பு என்பர் உரைகாரர்.

மேற்சுட்டிய வண்ணம் மணிவாசகர் அருளிய திருவாசகத்தை உள்வாங்கி அவரது பக்குவநிலையையும் அதனால் ஞான குருபரனைத் தேடிய மையும் சிவபிரான் திருவுள்ளம் கொண்டு குருமூர்த்தமாக வந்து ஆட் கொண்டு தீட்சை வகைகள் எல்லாவற்றையும் செய்தருளியமையும் திருவாதவூரர் ஜீவன் முத்தராகி, திருவாசகம் அருளிச் செய்தமையையும் தலயாத்திரை செய்து ஆங்காங்கே திருவாகங்களை அருளி செய்தமையையும் ஈற்றில் தில்லையில் சிவத்துடன் கலத்தலாகிய சுதேக முக்தியை அடைந்தமையையும் ஒரு சரித்திர வடிவமாக கடவுண்மா முனிவர் தந்துள்ளார். இவ்வகையில் சைவசித்தாந்தம் உள்ளடக்கிய அம்சங்கள் எல்லாவற்றையும் விளக்கி, பெரியபுராணம் போன்று பக்திச் சுவை ததும்பும் இலக்கியமாகவும் இலக்கணமாகவும் குருமூர்த்தத்தைக் காட்டும் வகையில் திருவாதவூர் அடிகள் புராணம் அமைந்துள்ளது.

**குருசீட பாரம்பரிய முறையில் செல்லப்ப சுவாமிகளும், யோக சுவாமிகளும்**

சைவபாரம்பரியத்தில் குருவின் இடம் பற்றி மூத்த சித்தரான திருமூலர் திருவாக்காகிய திருமந்திரத்திலும் பின்னர் நமது சைவம் சார்ந்த இலக்கியப் பெரும் பரப்பில் பெருமதிப்பைப் பெற்றுள்ள திருவாசகம் சுட்டும் குருவடிவம், மணிவாசகருடைய ஆத்மானுபவம், அதன் வெளிப்பாடாகிய திருவாசகம், அதுவே உயரிலக்கியமாகவும் - ஏன் இலக்கணமாகவும் -விளங்குகின்ற தன்மை ஆகியவற்றையும் பார்த்தோம். மேலும் அவருடைய வரலாற்றையே சொல்லுகின்ற திருவாதவூரடிகள்

புராணத்தையும் அவ்வாறே சாத்திர நூல்கள் கூறுவனவற்றையும் இணைத்துப் பார்த்தோம். இத்தகைய பாரம்பரியம் தொடர்ந்தே வந்து கொண்டிருக்கிறது. முறைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்டாலும் அடிப்படையில் அம்சங்கள் அவ்வாறே தொடர்ந்து வந்து கொண்டிருக் கின்றன. அவ்வகையில் இன்று நாம் சிவயோக சுவாமிகளின் நினைவைப் போற்றும் முகமாக நடக்கும் இந்நிகழ்வில் சிவயோக சுவாமிகள் எவ்வாறு செல்லப்ப சுவாமிகளினால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதையும் அவ்விருவருக்கும் இடையில் இருந்த தொடர்பையும் பற்றிச் சிந்திப்போம்.

"ரிகூஷி மூலம் நதிமூலம்" பார்க்கக் கூடாது என்பார்கள். யோக சுவாமிகள் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவரைத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிட்டவில்லை. எனது சிறுவயதும் தவக்குறைவுமே காரணங்களாய் இருந்திருக்கலாம். ஆயினும் சுவாமிகளைத் தரிசித்தவர்களைத் தரிசிக்கவும் அவர்களோடு உரையாடவும் கிடைத்தமையைப் பெரும் பேறாக நான் கருதுகிறேன். அவ்வகையில் சுவாமிகளைப் பற்றி அதிகாரபூர்வமாக, யாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் எழுதப்பட்ட நூல் **"யோகசுவாமிகள் – வாழ்க்கையும் வழிகாட்டுதலும்"** என்பது (சிவ தொண்டர் நிலையம் செங்கலடி பதிப்பு) அந்த நூலின் ஆக்கத்திற்குப் பெருமளவு பின்னணியில் இருந்தவர் செல்லதுரை சுவாமிகள் அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் இங்கே குறிப்பிட வேண்டியது இவ்வுரைக்குப் பெரிதும் இன்றியமையாதது என்றே நான் கருதுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களுடைய அழைப்பினை ஏற்று, செங்கலடி சிவதொண்டன் நிலையத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது.

பெரிய புராணத்தைப் பற்றிப் பேச வேண்டியது அவர் மூலமாக எனக்கு இடப்பட்ட இறைபணி. அன்று மாலை பணி நிறைவுற்றதும் இரவு நீண்ட நேரம் அவருடன் உரையாடிய போது **"சிவயோக சுவாமிகளை நான் நேரில் தரிசிக்கும் பேறு பெறாதவன். எனது கண்முன்னே நான் சிறுவனாக இருந்த காலத்திலேயே தமிழ் முனிவராக வாழ்ந்த வித்துவசிரோமணி கணேசையர் போன்ற மகான்களாலேயும் நன்கு மதிக்கப்பட்டவர் சுவாமிகள். எனவே**

**தங்களுக்கும் சுவாமிகளுக்கும் இடைப்பட்ட தொடர்பு பற்றித் தயைகூர்ந்து சொல்ல வேண்டும்"** என நான் பணிவுடன் வேண்ட அவர் கூறியவற்றிலிருந்து அறிந்தவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். செல்லத்துரை சுவாமிகள் கொழும்பில் கோட்டையில் (தற்போது ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். திருமுறைகளில் பற்று சிவாலயதரிசன நாட்டம். அதனால் ஆண்டுதோறும் மார்கழித் திருவாதிரைக்குச் சிதம்பர தரிசனம் கூடவே திருவண்ணாமலை ரமணாச்சிரமம், ரமணமகரிஷி தரிசனம் ஆகியவை உள்ளிட்ட வாழ்வு அவருடையதாய் இருந்தது. ஒரு தினம் அவருடைய நண்பர் **"யோக சுவாமி இங்கே வந்துள்ளார். நான் போகிறேன் நீங்களும் வாருங்கள்"** என்று கேட்க இவர் மறுக்க, அவர் தமக்காக வந்து ஒரு புறத்திலே நின்றால் போதும் என்று இவரது விருப்பத்திற்கு மாறாக அழைத்துச் சென்றார் எனவும். அங்கே சுவாமிகளை அவர் வணங்கி நிற்க தாம் எதுவும் பேசாது நின்று வந்ததாகவும் தெரிவித்தார்.

சிறிது காலத்தின் பின்னர் வட இந்தியா யாத்திரை செய்யும் ஒரு குழுவில் தாமும் கலந்து சென்று ரிஷிகேசத்தை அடைந்ததும் **"நான் எங்கு சென்று எனது இறுதிக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேனோ அவ்விடம் இதுவே தான்" எனத் தீர்மானித்து யாத்திரைக் குழுவுக்குத் தான் சிறிது காலம் அங்கே தங்கிப் பின்னர் நாடு திரும்புவதாகச் சொல்லிவிட்டு, தங்கியிருந்த விடுதியில் மாலை நேரம் கட்டிலில் சற்றே படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது அங்கே திடீரென யோக சுவாமிகள் தோன்றி"** "Return immediately" எனச் சொல்லி மறைந்தார் எனக் குறிப்பிட்டார். தான் உடனே புறப்பட்டு நாட்டுக்கு திரும்பியதாகவும் கூறினார். பின்னர் பழக்கதோஷம் காரணமாக (நாட்டை விட்டே ஏகி மனச்சாந்தி பெற எண்ணியிருந்தவர்) தாம் கற்பித்த பாடசாலைக்குச் சென்றதாகவும் அங்கே தம்மை, கைதடியில் உள்ள ஒரு பாடசாலைக்கு மாற்றி ஒரு கடிதம் வந்திருந்தது எனவும் கூறினார். அப்பாடசாலை சுவாமிகள் தவ வாழ்வு வாழ்ந்த ஆச்சிரமத்திற்கு அருகே அமைந்துள்ளது. அன்றே புகையிரதம் மூலம் பயணம் செய்து புங்கன்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கி நேரே

சுவாமியிடம் சென்றதும் **"சரி வந்தாச்சா"?** என்று சுவாமிகள் வாக்கு அருளிய பின்னர் சுவாமியுடன் நீண்ட காலம் உடன் உறையும் பேறுபெற்று சுவாமிகள் இறையடிக்கலப்புற்ற பின்னரும் அவர் திருவுள்ளப்படி செங்கலடியிலும் யாழ்ப்பாணத்திலும் சிவதொண்டன் நிலையத்தை நிர்வகித்து வருவதாகவும் குறிப்பிட்டார். சுவாமிகளை மானுடச்சட்டை தாங்கி எழுந்தருளியுள்ள இறைவனே என அவர் திடமாக நம்பியவர் என்பதை அவரோடு தொடர்ந்து உரையாடிய போது அவர் கூறிய உண்மைச் சம்பவங்களாலும் அவருடைய மெய்ப்பாடுகளாலும் நான் பூரணமாக நம்புகின்றேன் என்பதை இவ்விடத்தில் உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

யோகசுவாமிகளின் பூர்வாசிரமம் பற்றியத் திட்டவட்டமாகக் கூறக்கூடியவர் எவருமிலர். என்பதைச் செல்லத்துரை சுவாமிகளே குறிப்பிடுவார். அது அவசியம் இல்லை. 1872 ஆம் ஆண்டு அவதரித்தார் என்பதை நிச்சயம் செய்யலாம். பாடசாலைப் படிப்பு முடிந்த பின்னர் கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்திட்டத்தில் வேலைக் கருவிக் களஞ்சியப் பாதுகாவலராக உத்தியோகம் பார்த்தவர். அவ்வுத்தியோகம் அவருக்குச் சமய நூல்களைப் படிப்பதற்கும் அமைதியாகச் சிந்திப்பதற்கும் வாய்ப்பாக அமைந்தது. திருமுறைகள், தாயுமானார் பாடல்கள், சித்தர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், திருக்குறள், ஔவையார் பாடல்கள், குருநமசிவாயர் பாடிய நமசிவாய மாலை ஆகியவற்றில் பெரும் பகுதிகள் அவருக்கு வியக்கத்தக்க முறையில் மனனமாயிருந்தன. இத்துடன் பகவத் கீதை, முக்கியமான உபநிடதங்கள், பிரம்ம சூத்திரபாஷ்யம் முதலிய வடமொழி ஞான நூல்கள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். மேலும் விவிலிய வேதத்தில் உள்ள பல திருவசனங்கள், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், குர்ஆனின் வசனங்கள் ஆகியவை அவருக்கு மனனமாயின. கிளிநொச்சியில் உத்தியோகம் பார்க்கும் காலத்திலேயே கடும் பிரம்மச்சரிய விரதம் பூண்டிருந்த சுவாமிகள் ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வு, கடவுள் பக்தி, ஞானியார் நாட்டம், ஞான நூற்பயிற்சி

ஆகிய இயல்புகள் முதிர்ந்து சற்குரு தரிசனத்திற்கு எல்லாவகைகளிலும் பக்குவமும் பொருத்தமும் மிக்க பாத்திரமாயிருந்தனர் என்பது தெளிவு.

சிவயோக சுவாமிகளின் தவப்பயனாய் வாய்த்த அவரது குருநாதரது பூர்வீகத்தை பற்றித் தெரிந்த அளவில் அவர் நல்லூர்ப் பகுதியில் தோன்றியவர். சிறிது காலம் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆராய்ச்சியாகப் பணிபுரிந்தார். ஆனால் அவர் வெகு விரைவிலேயே உத்தியோகம் ஊர், பேர், உறவு எல்லாவற்றையும் விட்டொழிந்து, பார்ப்பவர்களது பார்வைக்கு விசர்க் கோலம் கொண்டு திரிந்தார்.

அவருக்கு உலகம் இட்ட பெயர் **"விசர்ச் செல்லப்பர்"** என்பதாகும். செல்லப்ப தேசிகரின் ஞானத்தந்தை கடையிற் சுவாமிகள் எனச் சிலர் குறிப்பிடுவதை, செல்லத்துரை சுவாமிகள் பக்குவமாக ஆனால் உறுதியாக மறுத்துள்ளார். செல்லப்ப சுவாமியின் தெய்வப்பித்தைக் கடையிற் சுவாமிகள் அறிந்திருந்தார். கடையிற்சுவாமிகளைச் சித்துகள் கைவரப்பெற்ற ஒரு மகான் எனச் செல்லப்ப தேசிகரும் மதித்திருந்தார். மேலும் கடையிற் சுவாமியிடம் சித்து வல்லபம் இருந்தது. அதனால் வசீகரிக்கப்பட்ட மக்கள் அவரைப் போற்றுதல் செய்தனர். தாந்திரீய நெறியினர்க்குரிய ஆசாரங்கள் அவரிடம் தெளிவாய்த் தெழிந்தன. செல்லப்ப தேசிகரோ **"நாமறியோம்"** என்று மெய்ஞ்ஞான மோனத்திருந்து **"எப்பவோ முடிந்த காரியம்"** எனக் கூறிக்கொண்டு வானகமும் வையகமும் வந்து பணிந்தாலும் ஆட்சி செய்யக் கருதாது சாட்சி மாத்திரமாய் இருந்தார். அத்துடன் சுவாமிகளுடன் நீங்கா நிழலாய் இருந்த செல்லத்துரை சுவாமிகள் தமக்கு எல்லாம் சொன்ன குருபரர் தமது குருநாதராகிய செல்லப்ப தேசிகரின் குரு கடையிற் சுவாமிகள் என ஒரு போதும் சொன்னதில்லை, மாறாக, **"மற்றவர்களை வசியம் பண்ணு வதும் ஒரு மயக்கம். கடையிற் சுவாமியும் அகப்பட்டுக் கொண்டார். ஆனால் செல்லப்பர் பெரிய மகான் இப்படி மயக்கவில்லை. "ஆரறிவார் எப்பவோ முடிந்த காரியம்"** என்று சொல்லிக் கொண்டு திரிவார்" என்று குறிப்பிடுகிறார்.

சிவயோக சுவாமிகள் ஞானநாட்டமுடையராய் முதலில் சற்குரு நாதரான செல்லப்ப தேசிகரைத் தரிசித்தமையை ஈண்டு சுருக்கமாகவேனும் குறிப்பிட வேண்டும். செல்லப்ப தேசிகரைத் தரிசித்து வரும் நியமம் பூண்டிருந்த விதானையார் திருநாவுக்கரசர் துரையப்பா என்போருடன் இளைஞனான சிவயோகரும் சென்றார். செல்லப்பரோ அவரைப் பார்த்ததும் "யாரடா நீ" என்று இடிபோன்ற குரலில் கர்ச்சித்தார். சித்தர்களின் வார்த்தைப் பிரயோகத்தில் வெளிப்படையடையான அர்த்தத்தை விட உட்பொருள் வேறு தொனிக்கும். எனவே பின்னர்

யோக சுவாமிகள் எழுதியே உபதேசித்தபடி **"நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆன்மா"** என்பதன் ஆரம்ப விளக்கமே அது. பின்னர் அவ்வரிய மந்திரப் பொருளை அகமுகமாகி உள்ளே சென்று அறியும் நெறியை **"தேரடா உள்"** என உபதேசித்தார் உள்ளே செல்வதற்குத் தடையாக இருக்கும் உலகப்பற்றை ஒழிப்பதற்காக **"தீரடா பற்று"** என வாக்கருளினார். உள்ளே சென்று பொருளறியாது திகைத்து நின்ற பொழுது **"ஒரு பொல்லாப்புமில்லை"** என மொழிந்தார் மாயை நீங்கி வியந்து நின்ற சீடரிடம் அது அப்படியே உள்ளதுதான். அதன் மருமத்தை **"ஆரறிவார்"** என்று அருளினார்.

**"வாசி யோகந் தேர்"**
**"இருவழியை அடை"**
**"கரு வழியைக் கட"**
**"நாசி நுனி நோக்கு"**
**"காசிதேசம் போ"**
**"பச்சைப் புரவியிலே பாங்காக ஏறு."**
**"தச்சன் கட்டா வீட்டிலே தாவு பரி கட்டு"**

என யோக முறையின் நுட்பங்களை அதற்குரிய பரிபாஷையிலே ஓதாதுணர்ந்த ஞானசிகரமாகிய செல்லப்ப தேசிகர் விளக்கினார்.

சிவயோகர் ஏலவே பழகியிருந்த பத்திநெறியை விட்டிடாது கைக்கொள்ள வேண்டும் என்பதற்காக,

**"அஞ்செழுத்தை ஓது"**

**"அக்குமணி அணி"**

**"நெக்கு நெக்குருகு"**

எனவும் அருளினார். செல்லப்ப தேசிகரிடம் கேட்டவற்றை அமைதியாய் இருந்து சிந்திப்பதற்கும் சாதனை செய்வதற்கும் ஏற்றதோர் இடமாகக் கிளிநொச்சியில் அவர் உத்தியோகம் பார்க்கும் இடம் வாய்ப்பாக இருந்தது. நிட்டை கூடல், தியானத்திருத்தல், குருமணியிடம் கேட்டவாறு சாதனை செய்தல் ஆகியவற்றில் சிவயோகரின் காலம் கழிந்தது. செல்லப்ப மூர்த்தமே அவருடைய தியான மூர்த்தமாயிற்று. எத்தொழிலைச் செய்தாலும் நல்லூர்த் தேரடியில் தேசிகனிடமே சிந்தை செல்லத் தொடங்கிற்று. பார்த்த உத்தியோகத்தை மேலதிகாரிகள் பெரிதும் வேண்டவும் மறுத்துத் துறந்தார். சுற்றம், உறவு யாவுந் துறந்து நல்லூர்த் தேரடிக்குச் சென்று செல்லப்பரின் உத்தம சீடனாக அவரது திருவடியே புகலெனக் கிடந்தார். குருநாதரோ சீடரைப் பக்குவப் படுத்துவதற்குக் கடுமையான முறைகளைக் கையாண்டார். மைல் கணக்காக உடற் பசியோடு நடத்தல், தயாரித்த உணவைப் பாத்திரத் தோடு உடைத்துச் சீடரைப் பசியோடு இருக்கச் செய்தல் ஆகியவையால் யோகமுனிவர் சுடச்சுடரும் பொன்போன்று சாதனையில் முதிர்ந்தார். பிற்காலத்தில் பூரண ஞானியாகச் சிவயோகர் மலர்ந்த பின் ஒருநாள் விதானையாரும் செல்லப்பரின் மற்றைய சீடர் சிலரும் சிவயோகருடன் உரையாடிக் கொண்டிருந்த போது விதானையார் **"செல்லப்பர் எல்லாவற்றையும் உங்களிடமே கொட்டிப் போட்டுப் போய் விட்டார்" என்று கூற இவர் "சும்மாவா பெற்றேன் மலையை வெட்டியல்லவா பெற்றேன்"** என்று கூறியதாகத் தம்மிடம் கூறியிருக்கின்றார். எனச் செல்லத்துரை சுவாமிகளே கூறியிருக்கிறார்.

செல்லப்பதேசிகர் மெல்ல மெல்லச் சீடருக்குத் தமது உண்மை நிலையை மறைக்காது காட்டத் தொடங்கினார். அச்செல்லப்ப மூர்த்தம் தேர்முட்டிப் படியில் மாறாதிருந்த மௌனித்திருந்த வேளைகளில் அம்மூர்த்தத்தைத் தரிசித்துத் நின்ற சிவயோகர் அதனை மௌன மொழியாலே

அறமுரைக்கும் தட்சிணாமூர்த்தமாகவே உணர்ந்தார். தமக்கேயுரிய முறையில் அவருக்குத் தீட்சை கொடுத்தருளினார் செல்லப்பக் குருமூர்த்தம். அது சம்பிரதாய பூர்வமான தீட்சை வகையைச் சேர்ந்ததல்ல. ஒரு நாள் செல்லப்ப தேசிகர் சிவயோகரைப் பார்த்து மகிழ்வோடும் உற்று நோக்கினர். பின்னர் ஒப்பற்ற ஒரு மொழியான மங்கல மந்திரம் ஈந்தனர். அந்த ஒப்பற்ற ஒரு மொழியால் சீடர் தெளிவு பெற்றனர். தம்முன்னே நிற்கும் குருபரனின் அருள்மேனி ஒப்பற்ற பேருருவாய் நிற்றலைத் தரிசித்தனர். சீடர் சிவயோகத்தில் திளைத்தனர். குருமூர்த்திக்கு ஏவல் செய்தது போல் சீடருக்கும் மண்ணும், விண்ணும் ஏவல் செய்யத் தொடங்கின. **"எல்லாம் கைவசம் ஆச்சே"** என்ற ஆனந்தம் மேலிட்டுச் சிவயோகர் திரியும் போது ஒரு நாள் நல்லூரில் சுவாமி வீதிவலம் வந்து கொண்டிருந்தது. சிவயோகர் "இன்று சுவாமி நன்றாக நனையப் போகின்றார்" என்றார். தன்பின்னால் நின்று **"இந்த நல்லூர் வீதியில் இப்படிச் சொன்னவர் அநேகர்"** என்று மாதவமணியான செல்லப்பதேசிகர் உரத்த குரலில் எச்சரிக்கை செய்வது போல் கூறியதைக் கேட்டதும் சிவயோகர் திகைத்துப் போனார். சற்று நேரத்தில் வானம் கறுத்து மழை பெய்தது. ஆயினும் சித்துகள் காட்டக் கூடிய, தளிர் விட்ட அற்ப ஆசையையும் சிவயோகரிடம் இருந்து குருநாதர் அப்படியே அகற்றிவிட்டார். பிற்காலத்தில் சிவயோக சுவாமிகள் தம்மை அண்டிய அடியார்கட்காக, சாதாரணமான மக்கள் நினைத்தற்கரிய செயல்களைச் செய்தனர், இறைவன் திருவருள் உந்த அச்செயல்கள் உலக நன்மை கருதி இயல்பாகச் செய்யப்பட்டவை எனக் கருதுதல் தவிரச் சித்துகள் செய்ய வேண்டும் எனச் செய்யப்பட்டவை அல்ல,

**"தாள மேளம் வேண்டாம்"**

**"சுவாமி ஆக்காதே"**

**"மால் பண்ணாதே"**

என்பன சுவாமிகள் அடிக்கடி பயன்படுத்திய வாக்குகள். சுவாமி தம்முடைய தோற்றத்தைக் கூடச் சாமானிய மக்கள் தோற்றத்தில் நின்றும் மாறுபடக் காட்டியதில்லை, சாதாரண வெள்ளை வஸ்திரமே தரித்து உலக நடையையே பின்பற்றி வாழ்ந்தவர். அவ்வகையில் சாதாரண மக்களைக்

கவர்வதற்காக - ஜனரஞ்சகமாகச் - செய்யப்படுபவையே- சித்துகள். அந்த மயக்கத்தை **"சனமருள் என்றே"** குறிப்பிட்டவர், கல்வி கூட மனிதனைத் திசை திருப்பிவிடும் என்பதற்காக-அந்த மயக்கத்திலிருந்தும்- ஆன்ம சாதகன் மீள வேண்டும் என்பதற்காக **"சாத்திர மருள்".** என்றும் சுவாமிகள் அதனைக் குறிப்பிடுவார். மகான்களின் சந்நிதியில் அசாதாரண சம்பவங்கள் இடம்பெறுவதில் எந்த நூதனமும் இல்லை, அவை சாதாரண மனிதர்களைப் பொறுத்தவரை அற்புதங்களாக இருக்கும். யோகர் சுவாமிகளின் அளவிறந்த கருணையால் நோய் நீங்குதல், வாழ்வியல் துன்பங்கள் நீங்குதல் எல்லாவற்றுக்கும் மேலாக மனமாசுகள் நீங்கப் பெற்று நல்ல மனிதர்களாக மாறுதல் முதலிய மிகப்பெரும் அற்புதங்களைப் பற்றி அவற்றிற்குப் பாத்திரமாகும் பேறு பெற்றவர்கள் அவற்றை மிகுந்த பத்தியோடு வெளிப்படுத்தும் முறையில் அவை அற்புதங்களாகக் குறிப்பிடப்படும். இறைவனது கருணையே இத்தகைய மகான்கள் வாயிலாக மனித குலத்தை அடைவதுண்டு. ஓர் உண்மைச் சம்பவத்தை இவ்விடத்தில் குறிப்பது பொருத்தமாகும். அ.ச. ஞானசம்பந்தன் எனப் பெயரிய தமிழ்நாட்டுப் பேராசிரியர் உலகறிந்த பேச்சாளர், நூலாசிரியர், திறனாய்வாளர், இந்நாட்டுக்குப் பல தடவைகள் வந்து ஆலயங்களிலும், சபைகளிலும் தொடர் விரிவுரைகள் பல நிகழ்த்தியவர். தமது வாழ்நாளின் இறுதிக் காலத்தில் எதிர்கால இளைய சமூகம் அறிந்திருக்க வேண்டிய மகான்களை அவர்களுக்குத் தெரிவிக்கும் முகமாக, தான் எழுதிய ஒரு சிறு நூலை யாழ்ப்பாணம் யோக சுவாமிகளுக்குச் சமர்ப்பணம் செய்ததோடு மிக முக்கியமான - சுவாமிகளுக்கும் தமக்கும் இடையே இருந்த அந்தரங்கமான - சில விடயங்களையும் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்துள்ளார்

## சிவதொண்டனிற் காணப்படும் அகச்சான்றுகள்.

சிவயோக சுவாமிகள் செல்லப்ப தேசிகர் ஆகிய குருமூர்த்தத்தைத் தரிசித்தமை, அவருக்குக் கிடைத்த உபதேசங்கள், அதனால் சிவயோ கரிடத்து ஏற்பட்ட மெய்ப்பாடுகள், பின்னர் சிவயோக சுவாமிகள் மனுக் குலம் உய்ய வேண்டும் என்பதற்காகச் செய்தருளிய உபதேசங்கள் அவருக்குத் திருமுறைகளிலும் புராணங்களிலுமிருந்த ஈடுபாடு, தம்முடைய குருநாதரையே இறைவனாகக் கருதியமை ஆகியவை எல்லாம் நற் சித்தனைப் பாக்களிலே அகச்சான்றுகளாகப் பரவியிருகின்றன. பதிப்பு ரையில் குறிப்பிட்டவாறு நற்சித்தனைப் பொருள்கள் ஞானப் பொக்கிஷ மாகவும் வேதோபநிடத ஆகம சாரமாகவும். ஆயிரக்கணக்கான அன்பர்க ளாற் பத்திசிரத்தையோடு பாராயணஞ் செய்தற் குரியனவாய் அமைந்துள்ளன.

**குருதரிசனம் - குருவின் திருக்கோலம்.**

"பாரறியார் இவருடைய தன்மை
பைத்திய காரனென்று பரிகாசம் செய்வார்"

"பித்தனென்று பலர் பேசிய திறத்தாய்"

"சிரித்து நல்லூர்த் தெருவினிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்த னர்பவ மினியெனக் கில்லையே"

**குருவின் உபதேசம்**

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்"

"ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் - சொன்ன மொழி

நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி"

**ஞானமும் காட்சியும் அவற்றின் விளைவும்**

"ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே - சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை யென்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே"

"எல்லாமென் கைவசமா சசே - சிவ சிவ
எடுத்த பிறப்பின் பயனசித்தி யாச்சே
உல்லாச மாய்த்திரிவ தாச்சே
உலகெலா மெனக்குற வாகிப் போச்சே"

**சிவயோகசுவாமிகள் மனுக்குலம் உய்யச் செய்த உபதேசங்கள்.**

"நீ உடம்பன்று மனமன்று புத்தியனறு,
சித்தமன்று, நீ ஆத்மா, ஆத்மா ஒரு நாளும்
அழியாது, இது மகான்களுடைய அனுபவ
சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில்
நன்றாய்ப் பதியக்கடவது"

"எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன் -நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி"

"சிவனடிக் கன்வே சிவயோக மாகும்
சிவனடிக் கன்பே சிவஞான மாகும்
சிவனடிக் கன்பே சிவபோக மாகும்
சிவனடிக் கன்பே சிவமய மாமே"

**திருமுறைகளிலும் புராணங்களிலும் ஈடுபாடு**

"அம்மையு மப்பனுமாய் நின்றாரார் அம்மானை
இம்மை மறுமைக் கிறைவர்கா ணம்மானை
இம்மை மறுமைக்கு கிவரிறைவ ரானாக்கால்
தம்மையறிந் தார்தலை யாவரோ அம்மானை"

"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணமெல்லாம்
கோமானுக் கொப்புக்கொடு - தங்கமே
குறை வொன்றும் வாரா தெடி"

"அன்பரன்பது சிவ சிவ சிவ ஆசையற்றது சிவ சிவ சிவ
இன்பமயமது சிவ சிவ சிவ ஈசனுயிர்தொறும் சிவ சிவ சிவ
முன்பின்னற்றது சிவ சிவ சிவ மோனமுதலது சிவ சிவ சிவ
தன்வயத்தது சிவ சிவ சிவ சர்வவல்லபம் சிவ சிவ சிவ"

**திருமுறைகள் சார்ந்த தலைப்புகள்.**

திருவாசகம்:- திருத் தெள்ளேணம். திருவம்மானை, திருவுந்தியார்

தேவாரம்:- திருத்தாண்டகம்.

**குருவே இறைவன்**

"ஆதியு மந்தமு மில்லா வொருவன்
ஆதியும் மந்தமு மானானென்று நதீபற
அவனென் குருவென் றுந்தீபற"

"புன்னகை யாலே புரமூன் றெரித்தவன்
என்னைவந் தாண்டானென் றுந்தீபற
எனக்கொரு குறைவில்லை யுந்தீபற"

சைவ பாரம்பரியத்தில் குருபரமூர்த்தம் என்ற தலைப்பில் சைவம் பிரமாணத் திருநூல்களாகக் கொள்ளும் திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், புராணங்கள் - ஆகியவற்றின் (குறிப்பாக திருமந்திரம்,

திருவாசகம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றின்) அடிப்படையில் அஞ்ஞான இருளை நீக்கும் ஞானகுருபரனாக இறைவனே வந்தருளி, பக்குவான்மாவை ஆண்டருள்வன் என்பதனையும் அவ்வகையில் குருபரமூர்த்திக்கும், அவனே வந்து ஆட்கொள்ளப் பெற்ற பரிபக்குவ நிலையைப் பெற்றவனாகிய சீடனுக்கும் இடையேயுள்ள தொடர்பையும் விளைவுகளையும் பாரம்பரியமாகவே சைவம் கொண்டுள்ள தன்மையையும் கண்டோம். அத்தகைய பாரம்பரியத் தொடரின் சின்னங்களாகவே விளங்கிய செல்லப்பா சுவாமிகளாகிய குருமூர்த்தத்தையும் அவரால் ஆட்கொள்ளப்பட்ட உத்தமோத்தம சீடராகிய சிவயோக சுவாமிகளையும் பற்றிச் சற்றே சிந்திக்க முடிந்தது. அதற்குப் பெரிதும் ஆதாரமாக இருந்தது. சிவயோக சுவாமிகளின் அணுக்கத் தொண்டராகப் பல்லாண்டுகளாக வாழ்ந்த செல்லத்துரை சுவாமிகளால் எழுதப்பட்ட "யோகர் சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்" என்ற நூலாகும். மேலும் சிவயோக சுவாமிகளின் திருவுள்ளக் கருத்துகளை எப்போதும் உலகுக்குக்காட்டுவதாக அமைந்துள்ள **"நற்சிந்தனைப்"** பாக்களும் உரைநடைப் பகுதிகளும் அகச்சான்றுகளாக அமைந்தன. அத்துடன் சிவயோக சுவாமிகள் வாழ்ந்த காலத்திலே பலதுறைகளையும் சார்ந்த பெருமக்கள், சாமானியர் பலரும் அவருடைய திருவருளைப் பெற்றமையையும், அதன் காரணமாக அவர்கள் பிரத்தியேமாகக் கண்டு அனுபவித்த அற்புத நிகழ்வுகளையும் எழுத்து மூலமாகவும்வாய்மொழி மூலமாகவும் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர் ரி.எம்.கே.மகாதேவன், முன்னாள் அரசாங்க அதிபர் ம.'காந்தா, முன்னாள் அரச உயர் உத்தியோகத்தர் மு.வைரமுத்து, இலக்கண வித்தகர், பண்டிதர் இ.நமசிவாயம், சைவசித்தாந்த சாத்திர ஆராய்ச்சியும் நூலாக்கமும் உடையவராகிய திருவிளங்கம் ஆகியோருடைய கருத்துகள் பெறுமதி வாய்ந்தவை.

ஏலவே இவ்வுரையில் குறிப்பிட்டது போல் சுவாமிகள் ஒரு வைதிக சைவர் சுத்தாத்துவித சைவசித்தாந்தி என்று குறிப்பிடத்தக்க அடையாளங்களைக் கொண்டிருந்தவர் எனக் கொள்ளினும் அவர் வரையறைகள் எல்லாவற்

றையும் கடந்த ஒருவராகவே திகழ்ந்தவர் என்பதை அழுத்திக் கூறவே விரும்புகின்றேன். செல்லத்துரை சுவாமிகள் குறிப்பிடுவது போன்று அவர் சகல சமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராயிருந்தார். சுசநாத வீரப் பெரும முதலாய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்றனர்.

அக்பர் போன்ற சூபி நெறியினர் சுவாமியின் சிறந்த பக்தராயிருந்தனர். திருவாளர் றம்ஸ்போதம் (Ramsbotham) முதலாய மேற்கு நாட்டுக் கிறித்தவர்கள் சுவாமியின் சீடராயினர். அவர்களை யெல்லாம் அவரவர் மார்க்கம் சொல்லும் வழியினிற் செல்லுமாறு வழிப்படுத்தியதுடன் அவர்கள் போற்றும் வேத நூல்களிலுள்ள வாசகங்களைக் கொண்டே போதனையும் செய்தார். அவர் ஒரு சமயியாகவும் சமயநன்னிலை பெற்றவராயும் இருந்ததுடன் சமயாதீதராகவும், தத்துவாதீதராகவும் திகழ்ந்தார். சுவாமி தமது குருபரனைச் **"சாதி சமய மில்லான் எங்கள் குருநாதன்"** என்றும் **"தத்துவாதீதனானான் எங்கள் குருநாதன்"** என்றும் போற்றினார். இவ்வாசகங்கள் சுவாமிக்கும் பொருத்துவதே என்று நாமும் ஒருவாறு சிவயோக சுவாமிகள் நிலை பற்றி விளங்கிக் கொள்ளலாம்.

சென்ற நூற்றாண்டில் இம்மண் தரிசித்த ஒரு மகானைப் பற்றிய நினைவுப் பேருரையை நிகழ்த்தும் பெரும் பேற்றினை எனக்களித்த யாழ். பல்கலைக்கழகத்தினர்க்கும் மிகுந்த பொறுமையோடு செவிமடுத்த உங்கள் எல்லோருக்கும் அம்மகானின் நினைவினைப் போற்றுதலே நோக்கமாக கொண்டு இந்நினைவுத் தொடரை நடத்தி வரும் சான்றோர்களுக்கும் எனது அன்பும், பணிவும் கலந்த நன்றியைத் தெரிவிப்பதோடு உங்கள் எல்லோருக்கும் சிவயோக குருமணி போற்றிய பெரும் பொருளின் திருவருள் பூரணமாகக் கிட்ட வேண்டுமென இறைஞ்சி அமைகின்றேன்.

நன்றி வணக்கம்

## உசாத்துணை


1. சிவஞானசித்தியார்
   (பதிப்பு) கூட்டுறவுத்தமிழ் நுற்பதிப்பு விற்பனைக், யாழ்ப்பாணம் 1971

2. சிவஞானபோதம்
   (பதிப்பு) சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை 1989

3. சிவப்பிரகாசம்
   (பதிப்பு) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி சென்னை 1969

4. சேக்கிழார் பெரியபுராணம்
   திருத்தொண்டர்புராணம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட வெளியீடு, திருச்சிராப்பள்ளி 1950

5. திருமந்திரம்
   (பதிப்பு) திருப்பனந்தாள் காசிமடம், திருப்பனந்தாள் 1951

6. திருவருட்பயன்
   (பதிப்பு) யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, இலங்கை, 1980

7. திருவாசகம்
   (பதிப்பு) ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திரப்பராய்த்துறை, திருச்சி 1992

8. சிதம்பரனார், ஏ.துடிசைக்கிழார், 1969, திருமூலநாயனார் வரலாறு, திருமந்திரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். ப.61

9. அருளம்பலவாணர் சு.(உ.ஆ),1967, திருவாசக ஆராய்ச்சியுரை, முதலாம் பாகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை.

11. செல்லத்துரை சுவாமிகள்:- யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழி காட்டுதலும்., பதிப்பு (சிவதொண்டன் சபை யாழ்ப்பாணம் 2014)

12. நற்சிந்தனை :- சிவதொண்டன் சபை யாழ்ப்பாணம் 1973.

13. மு.வைரமுத்து :- என்நெஞ்சில் இடம் கொண்ட ஒரு பெரியார் 1998.



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வறுத்தலைவிளானில் 1941 ஆம் ஆண்டு பிறந்த திரு. சபாரத்தினம் விநாயகமூர்த்தி அவர்கள் சிறுபராயத்திலேயே சமய நூல்களில் நாட்டமும், பரிச்சயமும் கொண்டவராய் இருந்தார். தனது ஆரம்பக்கல்வியை வறுத்தலைவிளான் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் கற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்து விளங்கிய இவர் ஆரம்பத்தில் தபாலதிபராக பணியாற்றிப் பின்னர் ஆசிரியர் நியமனம் பெற்று 1964 - 1965 இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராக நெடுந்தீவு மகா வித்தியாலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 12 ஆண்டுகள் பணி செய்தார். 1974 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களில் சித்தியெய்தி கலைப்பட்டதாரியானார். பயிற்றப்பட்ட பட்டதாரியான இவர் 1976 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியராக தெரிவுசெய்யப்பட்டு 2001 இல் சிரேஷ்ட போதனாசிரியராக ஓய்வு பெற்றார். 1977 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் ஓராண்டுப் பட்டப்பின்படிப்பு நெறியைப் (Postgraduate Diploma) பூர்த்தி செய்தார். யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் சிறிது காலம் கடமையாற்றினார்.

வித்துவசிரோமணி கணேசையரின் ஆசிர்வாதம் பெற்ற இவர், 1964 இல் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் தமது குருநாதர் செந்தமிழ்மணி பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களின் அருளாசியின் படி சமய சொற்பொழிவை ஆற்றத்தொடங்கிப் பல இடங்களில் அப்பணியை மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் புராணபடனத்திலும் ஈடுபட்டுவருபவர். இந்நாட்டில் வாழ்ந்த, வாழ்கின்ற சமயப் பேரறிஞர்களது நன்மதிப்புக்கும், வழிகாட்டலுக்கும் உரியவராகத் திகழ்கின்றார்.

சைவப் பேரறிஞர் அருணைவடிவேல் முதலியாரின் மகனார் கலாநிதி அருணைப் பாலறாவாயன் அவர்கள் இவரது உரையைக் கேட்டு மேடையிலேயே இவரைப் பாராட்டியமை இவரின் புலமைக்குச் சான்றாகும். சிறந்த ஆற்றொழுக்கான பேச்சுத்திறன் உடைய இவர் 1974 ஆம் ஆண்டில் திருக்கேதீஸ்வர ஆலய திருவாசக மடத்தினரால் "செஞ்சொற் செம்மல்" எனும் விருதும், அதேயாண்டில் நீர்கொழும்பு இந்து மன்றத்தினரால் "திருமுறைச் செல்வர்" விருதும், அதேயாண்டில் வண்ணார் பண்ணை பெருமாள் ஆலயத்தினரால் "பிரசங்கபூஷணம்" எனும் விருதும், 2007 ஆம் ஆண்டு இந்தியாவில் திருவாவடுதுறை ஆதீனத்தால் "சிவத்தமிழ் செல்வர்" எனும் விருதும், 2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தினரால் "ஞானவாச்சியர்" எனும் விருதும், அதுபோல மேலும் பல விருதுகளும் பட்டங்களும் பெற்றுக் கொண்டவர். இவற்றில் மிகமுக்கியமாக 2004 ஆம் ஆண்டு இந்தியாவில் திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" எனும் உயரிய பட்டத்தினை வழங்க முன்வந்தபோது ஆறுமுகநாவலரைத் தவிர அப் பட்டத்தினைப் பெறுவதற்குத் தகுதியானவர் இவ்வுலகில் வேறு எவரும் இல்லை என மிகவும் கண்ணியமான முறையில் அந்தப் பட்டத்தினை மறுத்து ஏற்றுக் கொள்ளாது நின்ற இவரதுமாண்பு தனித்துவம் மிக்கது.

நீண்டதோர் மாணவப் பரம்பரையினைக் கொண்டுள்ள இவர், பல்வேறு சமயசார் சஞ்சிகைகளில் கட்டுரைகள், நயப்புரைகள், ஆய்வுரைகள் மற்றும் ஆக்கங்களை எழுதிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஈஸ்வர அர்ப்பணம் எனும் வகையிலான ஆலய சைவப்பிரசங்கங்கள், புராணபடனங்கள், திருமுறை ஓதுதல் போன்றவற்றில் மிகத்தனித்துவமாக இவர் ஆற்றிவரும் பங்களிப்புகள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வகையில் ஈழத்தின் பேராளுமைகளுள் தவிர்க்க முடியாத ஒருவராக அடையாளப்படுத்தப்படும் அளவிற்கு இவரது பணிச்சிறப்புக்கள் புலமை மிக்கவையாகவும், சமுகத்திற்குப் பயன்தருவனவாயும் விளங்குகின்றன.

Guru Printers, Thirunelvely. 021 222 8266